முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 45/2023

நாள்: 04.01.2025

வாதி தரப்பு 1வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திருமதி.G.ரேவதி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கீதா கிருஷ்ணன் | வயது | : | 57 |
| தந்தை பெயர் | : | சுந்தரவரத ரெட்டி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பிள்ளையார்பட்டி | தொழில் | : | விவசாயம் |

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) என் தந்தை 13.7.2003 அன்று காலமானார்.

2) நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும்.

3) வா.சா.ஆ.1 என் தாயார் ரெங்கநாயகி அம்மாள் தமிழ்நாடு அரசுக்கு 24.5.1976ல் எழுதிக் கொடுத்துள்ளார்.

4) வா.சா.ஆ.1 மூலமாக சர்வே எண்.74B/ 1H, 74B/ 13I, 74/1B2, 74B3 ஆகிய சொத்துக்களை தமிழ்நாடு அரசுக்கு எழுதிகொடுத்துள்ளார்.

5) மேற்படி சொத்துக்கள் என் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) என்தகப்பனார் வழக்கு சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணங்களும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

7) எனது தந்தையுடன் பிறந்தவர்கள் நாராயணசாமி ரெட்டியார், ரெங்கசாமி ரெட்டியார், ராஜகோபால் ரெட்டியார், பரிசு ரெட்டியார், கலியபெருமாள் ரெட்டியார் என்றால் சரிதான். மேற்படி நபர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

8) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் விபரங்கள் நான்தான் சொன்னேன்.

9) வழக்கு சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

10) வழக்கு சொத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 98 செண்ட்டுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

11) தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு வா.சா.ஆ.1 முதல் 3 வரை உள்ள ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12) என் தகப்பனாருக்கு இந்த சொத்துக்கள் எதிரிடை அனுபவ பாத்தியமாக கிடைத்தது என்று வழக்குரையில் நாங்கள் குறிப்பிட் டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

13) நான் 21.1.1967ல் பிறந்தேன். எனது வயது 57. நாங்கள் சுமார் 60 வருடாக அனுபவித்து வருகிறோம் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

14) வழக்குரையில் நான் வழக்கு சொத்திற்கு பிரதிவாதியின் தகப்பனார் நடேச பண்டாரம் தான் உரிமையாளர் என்று சொல்லி உள்ளேன் என்றால் சொல்லவில்லை.

15) என் தகப்பானாருக்கு முருகேசன் என்பவர் 9.2.1975ல் எழுதி கொடுத்த கிரயபத்திரத்தின் சான்றிட்ட நகல் இதுதான். அது பி.வா.சா.ஆ.1

16) பி.வா.சா.ஆ.1ஐ அனுசரித்து கிரய பத்திரம் எதுவும் தமிழ்நாடு அரசுக்கு எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான்.

17) 1958ல் இருந்து வழக்கு சொத்தை அனுபவித்து வந்ததை காட்டுவதற்கு அடங்கல் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18) என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா புத்தகத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

19) 28.5.2014ல் எனக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்கள்.

20) வா.சா.ஆ.3 ல் இந்த சொத்து எங்களுக்கு எதிரிடை அனுபவத்தின் மூலமாக கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

21) வா.சா.ஆ.8ல் அந்தோணியப்பா என்பவருக்கு 16.11.2015ல் கிரய சாசனம் எழுதி கொடுத்த பத்திரத்திலும் எங்களுக்கு எதிரிடை அனுபவத்தின் மூலமாக கிடைத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

22) நடேச பண்டாரத்திற்கு கண்ணுசாமி பண்டாரம் எழுதிகொடுத்த கிரய பத்திரம் பற்றி தெரிந்துகொண்டேன். அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் இதுதான். அது பி.வா.சா.ஆ.2

23) 23.10.1958ல் நடேசபண்டாரம் கிரயம் வாங்கியது தெரிந்துகொண்டேன். அந்த கிரயபத்திரத்தின் சான்றிட்ட நகல் இதுதான். அது பி.வா.சா.ஆ.3

24) கிராமத்தில் அதிக சொத்து உள்ள நபர்களுக்கு அரசு பட்டாதாரர் எண் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

25) பி.வா.சா.ஆ.2ல் நடேசபண்டாரத்தின் தகப்பனாருக்கு மிராசு 441 நெ. பட்டாதாரர் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

26) என் தகப்பனார் மிராசு பட்டாதாரர் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

27) பிரதிவாதி ரயில்வேயில் காவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான்.

28) வா.சா.ஆ.1ல் என் தாயாருக்கு இந்த சொத்து எப்படி கிடைத்தது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

29) நடேச பண்டாரம் வாங்கிய சொத்து பத்திரங்களில் உள்ள நான்கு எல்லைகளில் எங்கள் குடும்பத்தின் சொத்து இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

30) வா.சா.ஆ.1, 2, 3 மற்றும் 8 ஆவணங்களில் பிரதிவாதியோ, பிரதிவாதியின் குடும்பத்தினரோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.)

/உண்மை நகல்/

ஒம்/K.பூரண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்.